# சி.எஸ்.இ. (CSE )செய்தி வெளியீடு

## “காப்டன் அமெரிக்கா” வும் அதன் பருவநிலை பற்றிய உறுதிமொழிகளும் : வெற்று ஆர்ப்பாட்டம்.

தில்லியைத் தளமாகக் கொண்ட அறிவியல் மற்றும் சுற்றுச்சூழல் மையம், அமெரிக்க ஐக்கிய நாடுகளின் தட்பவெப்ப நிலை செயல் திட்டங்களைப் பற்றி மேற்கொண்ட விரிவான ஆய்வு, உலகின் மிகுந்த பொருளாதார ஆற்றலைக் கொண்ட ஒரு நாடு தட்பவெப்பநிலை மாற்றங்களை எதிர்கொள்ளுவதில் மிகச்சிறிய பங்கே ஆற்றுகிறது எனக் கூறுகிறது.

- அமெரிக்காவின் தேசிய அளவில் திட்டமிடப்பட்டுள்ள நிர்ணயிக்கப்பட்ட பங்களிப்புகள் (INDCs) “குறிக்கோளற்றவையும் அநீதியானவையும்” என்று சி.எஸ்.இ. அழுத்தமாகக் கூறுகிறது.
- முதன்முறையாக ஒரு தெற்கத்திய சிந்தனைக் குழுவிடம் இருந்து வெளியாகும் இந்த ஆய்வில் அமெரிக்க ஐக்கிய நாடுகளின் தட்பவெப்பநிலைக் கொள்கை பகுத்தாய்ந்து, அது வழக்கம்போன்ற ஒரு வணிக நடவடிக்கையே என்று சி.எஸ்.இ. கண்டறிந்துள்ளது.
- அமெரிக்க ஐக்கிய நாடுகளின் எரிசக்தி வழங்கும் அமைப்பு புதைபடிம எரிபொருளையே சார்ந்து இருக்கும் என்றும், 2030 களில் அதிகபட்சமாக 76 % முக்கிய எரிசக்தி படிமப் பொருளிலிருந்தே கிடைக்கும் என்றும் இந்த ஆய்வு கண்டுள்ளது. புதுப்பிக்கக் கூடிய எரியாற்றல் 2030-ல் வெறும் 15 சதவிகிதமாகவே இருக்கும்.
- இடப்பெயற்சி முறையை மாற்றும் எந்த ஒரு குறிப்பிட்ட தேசிய கொள்கையையும் அமெரிக்கா இதுவரை முன்வைக்கவில்லை. 86 சதவிகித மக்கள் தங்கள் சொந்த வாகனத்தையே ஓட்டிச் செல்கிறார்கள். பொதுப் போக்குவரத்து குறைகிறதே அன்றி கூடவில்லை.
- அமெரிக்காவின் கட்டிடத்துறை ஆற்றல் பாதுகாப்பு விதிமுறைகள் சுயமானதும் பலவீனமானதும் ஆகும். மேலும், அமெரிக்கர்கள் பெரும்பெரும் வீடுகளை வாங்குவதோடு ஆற்றல் சேமிப்புத் திறனற்ற சாதனங்களையே வாங்கிக் குவிக்கின்றனர்.
- தொழில்துறை மட்டுமே ஆற்றல் செலவழிப்பையும் மாசுப்பொருள் வெளியேற்றத்தையும் குறைத்துள்ள ஒரே ஒரு துறை. ஆனால் இதற்கு

காரணம் மாசு வெளியேற்றும் உற்பத்தி வெளிநாட்டவருக்கு வழங்கப்பட்டுள்ளதே. அமெரிக்காவில் பயன்படுத்தப்படும் 60 சதவிகித சாதனங்கள் இறக்குமதி செய்யப்படுகின்றன.

- கொள்கையால் கட்டுப்படுத்தப்பட்டு பசுங்குடில் வாயு உமிழ்வு (GHG) குறைவதற்கான எந்தத் தடயமும் இல்லை.  மாசு வெளியேற்றப்படும் முறையில் இருந்தே  இது தெளிவாகிறது. 2007-08-ல் குறைந்த இது (தொழில் மந்தத்தின் காரணமாக) பின் மீண்டும் மேல் நோக்கி உயரத் தொடங்கி விட்டது.

- வழக்கமான வணிகத்தன்மையிலான அமெரிக்காவின் அணுகுமுறை என்பது தட்பவெப்பநிலை மாற்றத்தைக் கையாளும் பளுவை இந்தியா போன்ற நாடுகளின் மேல் சுமத்துவதே ஆகும். தட்பவெப்ப நிலை மாற்றத்தால் ஏற்படும் பாதிப்பால் உலகத்தையே அது ஆபத்துக்குள்ளாக்கி வருகிறது. இது இந்தியா போன்ற நாடுகளில் வெளிப்படையாக புலப்பட ஆரம்பித்துள்ளது. தாறுமாறான காலநிலையே இங்கு இயல்பானதாக மாறிவிட்டது. இதனால் ஏழைகளும் பலவீனமானவர்களும் இழப்புக்கு ஆளாகி வருகின்றனர்.

- இது சிரமம் அளிக்கும் உண்மையாகும். மிகவும் சிரமமானது. அமெரிக்கவின் நுகர்வும் வாழ்க்கைமுறையும் மறுபரிசீலனைக்கு உட்படுத்தப்பட வேண்டியதாகும்.

**புது தில்லி, அக்டோபர் 19, 2015**:  தில்லியைத் தளமாகக் கொண்ட அறிவியல் மற்றும் சுற்றுச்சூழல் மையம் (CSE) அமெரிக்காவின் தேசிய அளவில் திட்டமிடப்பட்டுள்ள நிர்ணயிக்கப்பட்ட பங்களிப்புகள் (INDCs) பற்றிய கடுமையான குற்றச்சாட்டுகளை முன்வைத்துள்ளது. தட்பவெப்பநிலை மாற்றத்தைக் குறித்து அமெரிக்கா எதையுமே கூடுதலாகச் செய்யவில்லை; நடைபெறும் மாற்றங்கள் யாவுமே பொருளாதாரக் காரணங்களினாலும் சந்தைப் போக்குகளாலும் இயற்கையாகவும் தாமாகவுமே நடைபெறுகின்றன. இதைவிட மோசம் என்னவென்றால், ஏற்படும் மேம்பாடுகளும் அதீத  வளர்ச்சியாலும் நுகர்வாலும் வீணடிக்கப்பட்டு வருகின்றன. மையம் தனது ஆய்வை “கேப்டன் அமெரிக்கா: யு.எஸ்ஸின் தட்பவெப்பநிலை இலக்குகள்- ஒரு கணக்கீடு” என்ற தலைப்பில் இன்று இங்கே வெளியிட்டுள்ளது.

இந்த அறிக்கையை வெளியிட்ட சி.எஸ்.இ-யின் இயக்குநர் சுனிதா நாராயண்,  “அமெரிக்காவின் தேசிய அளவில் திட்டமிடப்பட்டுள்ள நிர்ணயிக்கப்பட்ட பங்களிப்புகள் (INDCs) “குறிக்கோளுடையவையும் அல்ல; நேர்மையானவையும் அல்ல” என்று குறிப்பிட்டார். அமெரிக்காவின் தட்பவெப்பநிலை இலக்குகளைப் பற்றி முதன்

முதலில் இவ்வளவு விரிவாக ஆய்ந்த முதல் தெற்கத்திய சிந்தனைக் குழு சி.எஸ்.இ. யேயாகும்.

"மீதி உலகம் முழுவதும் பருவநிலை மாற்றத்தை எதிர்த்துப் போராட முனைந்து நிற்கும் நிலையில், யு.எஸ்ஸின் முக்கிய பொருளாதாரத் துறைகள்- எரிசக்தி, போக்குவரத்து, தொழிற்சாலைகள்- வழக்கமான வணிக நோக்குடனேயே 2030 வரை தொடர்ந்து செயல்பட்டுக் கொண்டே இருக்கும்" என்று நாராயண் மேலும் கூறுகிறார்.

## எரி சக்தித் துறையில்

"அமெரிக்கா தனது பொருளாதாரக் கொள்கைகளைக் குறைந்த கார்பனை நோக்கியதாக இதுவரை வகுக்கவில்லை. இதன் விளைவாக இன்றிருப்பதை விட அமெரிக்கா 2030-ல் 20 % அதிக புதைபடிம எரிபொருளைப் பயன்படுத்தும். 2030-ல் முக்கிய எரியாற்றலில் புதுப்பிக்கும் ஆற்றல், இன்றிருக்கும் 11 சதவிகிதத்தில் இருந்து உயர்ந்து ஏறத்தாழ 15 சதவிகிதமாக மட்டுமே இருக்கும்". என்று சி.எஸ்.இ-யின் துணைப் பொது இயக்குநர் சந்திர பூஷன் கூறுகிறார்.

பூஷன் மேலும் கூறுகிறார்: "எரிசக்தி துறையில் மாசு வெளியேற்றத்தைக் குறைக்கும் நோக்கம் கொண்ட ஜனாதிபதி ஒபாமாவின் மிகவும் ஆர்வமிக்க பருவநிலை செயல்திட்டமான "தூய எரிசக்தி திட்டமும்" (CPP) வழக்கமான வணிகத்தை விடவும் ஆர்வநோக்கம் குறைந்ததாகவே உள்ளது. 2005-2014-ல் மாசு வெளியேற்றம் மின் துறையில் ஆண்டுக்கு 1.8 சதவிகிதம்குறைந்தது. இதற்கு முக்கிய காரணம் நிலக்கரியில் இருந்து இயற்கை வாயுவுக்கு மாறியதே. தூய எரிசக்தி திட்டம் மூலமும் இப்போதிருந்து 2030 வரை 1.6 சதவிகிதமே குறையும். 2030-லும் அமெரிக்காவின் 60 சதவிகிதம் மின்சாரம் நிலக்கரி மற்றும் வாயுவில் இருந்தே உற்பத்தி செய்யப்படும்.

## போக்குவரத்துத் துறையில்

இதர உலகம், போக்குவரத்துத் தொடர்பான மாசைக் கட்டுப்படுத்த வேண்டுமானால் மக்கள் நகர வேண்டுமே தவிர கார்கள் அல்ல என்றும், இடம்விட்டு இடம்பெயர்வதைப் பற்றிய மறுகண்டுபிடிப்புகள் தேவை என்பதையும் உணர்ந்து வருகையில் , அமெரிக்கா பின்னோக்கிச் செல்கிறது. பொதுப் போக்குவரத்தைப் பயன்படுத்தும் தனி நபர் பயணங்கள் அமெரிக்காவில் குறைந்தும் தேக்கமடைந்தும் வருகின்றன. 86 சதவிகித அமெரிக்கர்கள் கார் மூலமே பயணம் செய்கின்றனர் – இப்போக்கு, மாற்றம் எதையுமே சுட்டிக்காட்டவில்லை. பயணக் கார்களில் இருந்து மாசு வெளியேறுவது ஒவ்வொரு ஆண்டும் அதிகரித்துக் கொண்டே

வருகிறது. 2017 ஆம் ஆண்டில் கார் விற்பனை உச்சத்தைத் தொடும் என்றும் எதிர்நோக்கப்படுகிறது.

“அதிகமாக அமெரிக்கா சார்ந்திருக்கும் வாகனங்களுக்கான எரிபொருள் திறனின் தர அளவு போதுமானது அல்ல என்பதையே எங்கள் ஆய்வு காட்டுகிறது. வாகனங்கள் அதிகத் தரமுள்ளதாக மாறமாற அமெரிக்கர்கள் அதிக அதிகமாக வாகனத்தைப் பயன்படுத்துகிறார்கள். தனிநபர் கார் பயன்பாட்டை விட்டு அமெரிக்கா விலக வேண்டும்” என்று கூறுகிறார் நராயண்.

### கட்டிடத் துறையில்

1980-2009 களில் குடித்தனத் துறையில் ஆற்றல் செறிவு மிகவும் குறைந்து 37 சதவிகிதமாக மாறியது. ஆனால் அதே நேரத்தில் அதிக வீடுகள் கட்டப்பட்டன; வீடுகளின் அளவு 20 சதவிகிதம் கூடியது. அதே சமயத்தில் “திறன் வாய்ந்த” சாதனங்களின் பயன்பாடு வியக்கத்தக்க வகையில் அதிகரித்தது. இவையெல்லாம் உண்மையில் எரிசக்தி பயன்பாடு குறையாமல் அப்படியே இருந்தது என்பதையே காட்டுகிறது. கிடைத்திருக்கக் கூடிய மாபெரும் இலாபம் இவ்வாறு இழப்புக்கு உள்ளாயிற்று.

### தொழில்துறையில்

அமெரிக்காவில் மாசு உமிழ்வும், எரிசக்தி பயன்பாடும் குறைந்த ஒரே துறை இதுவாகும். ஆயினும் தொழிற்சாலைப் பொருட்களின் நுகர்வு விண்ணைத் தொட்டது. அமெரிக்கா இவற்றை உற்பத்தி செய்யவில்லை. மாறாக விற்பனை ஆகும் பொருட்களில் 60 சதவிகிதம் இறக்குமதி செய்யப்படுகிறது. “தொழிற்சாலை மாசு குறையவில்லை; ஆனால் வெளிநாட்டுக்கு அனுப்பப்பட்டுள்ளது” கூறுகிறார் நாராயண்.

### நுகர்வே பிரச்சினை

பொருட்களையும் சேவைகளையும் நுகர்தலால் வளர்ந்து வரும் பிரச்சினையைப் பற்றி அமெரிக்காவின் பருவநிலைக் கொள்கை எதையும் பேசவில்லை. 1990-ல் இருந்து அமெரிக்காவின் நுகர்வுச் செலவு அளப்பரிய வகையில் அதிகரித்து விட்டது. மதிப்பு ரீதியாக பார்க்கும் போது 1990-2014 காலகட்டத்தில் பொருள் மற்றும் சேவைகளின் மொத்த நுகர்வு இரண்டு மடங்கு ஆகிவிட்டது.

” சராசரி அமெரிக்க குடும்பம் ஒன்றின் நுகர்வுச் செலவு, ஐரோப்பிய யூனியன் -28 குடும்பத்தை விட இரண்டு மடங்கும், சீனத்தை விட 24 மடங்கும், இந்தியாவினதை விட 44 மடங்கும், வங்காள தேசத்தைவிட 64 மடங்கும், மாலவி குடும்பத்தை விட 173 மடங்கும் ஆகும். அபரீதமான

இந்த நுகர்வு அளவைக் கட்டுப்படுத்தாமல் அமெரிக்காவால் உண்மையில் பருவநிலை மாற்றத்தைக் கட்டுப்படுத்த முடியாது” என்று கூறுகிறார் பூஷன்.

## மலிவான எரிசக்தியே நுகர்வை அதிகரிக்கிறது

எரிசக்தி நுகர்வுக்கும் அதனால் உண்டாகும் கார்பன் டை ஆக்சைடு உமிழ்வுக்கும் மலிவான எரிசக்தியே நேரடியான காரணம். அமெரிக்காவில் எரிபொருள் விலை குறைவாக உள்ளது; குறைந்து கொண்டும் வருகிறது. 1990-2014 களில் நகர்ப்புற விலைவாசி அட்டவணை 81 சதவிகிதமாக அதிகரித்தது. ஆனால் வீட்டுக்கான யூனிட் மின் கட்டணம் 12 சதவிகிதம் குறைந்தது. இதன் விளைவாக 1990-ல் தனிநபர் மின் நுகர்வு 11373 கிலோ வாட்/மணி/ஆண்டில் இருந்து 2014-ல் 11373 கி.வா/ம/ஆண்டாக உயர்ந்தது. “கட்டணக் குறைவு, எரிபொருள் திறனை மேம்படுத்தும் முயற்சிகளுக்கு எதிர்மாறான விளைவை ஏற்படுத்தின” என்று விளக்குகிறார் பூஷன்.

## சி.எஸ்.இ-யின் முக்கிய ஆய்வு முடிவுகள்

- அமெரிக்காவின் தேசிய அளவில் திட்டமிடப்பட்டுள்ள நிர்ணயிக்கப்பட்ட பங்களிப்புகள் (INDCs) குறிக்கோளுடையவையும் அல்ல நேர்மையானவையும் அல்ல: அமெரிக்காவின் தேசிய அளவில் திட்டமிடப்பட்டுள்ள நிர்ணயிக்கப்பட்ட பங்களிப்புகள் மாசு உமிழ்வை 2025-க்குள் 2005 அளவை விட 26-28 % குறைப்பதாக உறுதியளித்தது. இது 1990 அளவை விட 2025-ல் வெறும் 13-15 % குறைப்புக்கு இணையானதே. அதாவது, அதன் தனிநபர் மாசு உமிழ்வு 2025-ல் 13.5 டன்னாக இருக்கும். இதனோடு ஒப்பிடும் போது, 2030-ல் 1990 அளவை விட 40 சதவிகிதம் குறைப்பதாக ஐரோப்பிய யூனியன் உறுதியளித்துள்ளது. அதாவது, 2025-ல் ஐ.யூனியனின் தனிநபர் உமிழ்வு 7.0 டன்னாக இருக்கும்-இது அமெரிக்காவின் அளவில் பாதி ஆகும். 2025-ல் இந்தியாவின் தனி நபர் உமிழ்வு 3,00-3.5 டன்னாக இருக்கும். இது அமெரிக்காவின் அளவில் நாலில் ஒரு பங்கே யாகும்.
- கடந்த காலத்தில் செய்தது போலவே அமெரிக்கா தொடர்ந்து மீதமிருக்கும் கார்பன் வெளியை அளவுக்கு மீறி ஆக்கிரமித்துக் கொள்ளப் போகிறது. 2030 வரை உலகின் மக்கள் தொகையில் 5 சதவிகதமே இருக்கும் அமெரிக்கா உலக வரவுசெலவில் 17.25 சத விகிதத்தைத் தின்றொழிக்கும். 2030-க்குப் பிறகு பிற நாடுகளுக்கு எந்த ஒரு கார்பன் பட்ஜெட்டும் விட்டுவைக்கப் படப்போவதில்லை.

- 2005-க்குப் பின் அமெரிக்காவில் கொள்கை ரீதியாகப் பசும்குடில் உமிழ்வைக் கட்டுப்படுத்தும் முயற்சிக்கான சான்று எதுவுமில்லை. உண்மையில், பொருளாதாரம் சீர்பட சீர்பட நுகர்வு அதிகரித்து உமிழ்வும் அதிகரிக்கவே செய்யும்.
- குடும்ப அல்லது தேசிய அளவில் திட்டமிடப்பட்டுள்ள நிர்ணயிக்கப்பட்ட பங்களிப்புகள் (INDCs) ஆகிய அனைத்து பருவநிலை மாற்ற செயல் திட்டங்களும் வழக்கமான வணிகப் போக்குகளே. அவை பொருளாதாரத்தைக் குறைந்த கார்பன் கொண்டதாக மாற்றியமைக்கப் போவதில்லை.
- ஆர்வமிக்க செயல்களில் ஈடுபடாத காரணத்தால் அமெரிக்கா தட்பவெப்பநிலை மாறுதலை எதிர்த்துப் போராடும் பளுவை பிற நாடுகளின் தோளில் ஏற்றுகிறது.
- ஒரு பிளவுபட்ட ஆற்றலாகவே நாம் பாரிசை நோக்கி ஆயத்தம் ஆகிறோம்.
- ஐக்கிய நாடுகளின் பருவநிலை மாறுதல் குறித்த விவாதங்களில் அமெரிக்காவே மாபெரும் பிளவுபடுத்தும் சக்தியாக விளங்குகிறது. சொந்த நாட்டில் எதுவுமே செய்ய மாட்டோம் என்ற அமெரிக்காவின் அணுகுமுறை, ஐக்கிய நாடுகளின் பருவநிலை மாறுதல் மாநாட்டை, “பொதுவான ஆனால் வேறுபட்ட கடமைகள் மற்றும் ஏற்ற திறமைகள்” அடிப்படையில் ஒவ்வொரு நாடும் செயலாற்ற வேண்டும் என்ற நிலையுள்ள அமைப்பு என்ற நிலைமைக்குப் பதில் நாடுகள் தங்களுக்குள் போட்டியிட்டுச் பாதாளத்தை நோக்கிச் செல்லக் கூடிய ஒரு பந்தய அமைப்பாக மாற்றியுள்ளது.
- “அமெரிக்காவின் ஆர்வக் குறைவு என்பது பிற நாடுகள் ஒவ்வொன்றின் ஆர்வக் குறைவே இருக்கும் என்று பொருளாகிறது. இன்றையப் பருவநிலை மாறுதல் செயல்பாடுகள் குறித்த கலைச்சொற் தொகுதி ஒத்துக்கொள்ளுபவை, “கீழிருந்து-மெல்” “நாட்டளவில் தீர்மானிக்கப்பட்ட செயல்பாடு” மற்றும் “தன்னிச்சையானது”. இவை அமெரிக்காவால் கண்டுபிடிக்கப்பட்டவையும் உருவாக்கப்பட்டவையும் ஆகும். இவை அமெரிக்காவுக்கு மட்டுமே பொருந்தும்” என்று நாராயண் கூறுகிறார்.
- அவர் தொடர்ந்து கேட்பது: “ அமெரிக்காவின் வசதிக்கு ஏற்றபடி – 2010-ல் கான்கனிலும், 2011-ல் டர்பனிலும் நடந்தது போல- பருவநிலை மாநாடு மீண்டும் வடிவமைக்கப்படுமா என்பதே உலக நாடுகளின் முன் இருக்கும் பெரும் கேள்வி. அல்லது, உலகம் ஒன்றிணைந்து ஏழை மற்றும் மிகவும் பாதிக்கப்பட்டுள்ள நாடுகளுக்கு ஏற்ற ஓர் உலகளாவிய ஏற்பாட்டை உருவாக்குமா? இதுவே பாரிசில் முன் நிற்கப் போகும் பிரச்சினை. வேறு எதுவும் இல்லை. மீதி எல்லாம் காணொளி மற்றும் சாலைக்காட்சியே.